# பேர்கால முனாஜாத்

மௌலாய ஸல்லி வசல்லிம் தாயிமன் அபதா
அலா ஹபீபிக கைரில் கல்கி குல்லிஹிமி
அல்ஹம்துலில்லாஹி ஹம்தந் தாயிமன் அபதா
வல்ஹம்துலில்லாஹி தும்மல்ஹம்துலில்லாஹி
அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன அலா
மாகான யுல்ஹிமுனீ அல்ஹம்துலில்லாஹி.
மௌலாய ஸல்லி வசல்லிம் தாயிமன் அபதா
அலா ஹபீபிக கைரில் கல்கி குல்லிஹிமி

1. எங்களினம் சுற்றங்கட்கும்
என்னுடைய தோழர்கட்கும்
உங்களைப்போல் எங்குமுண்டோ
உதவி உபகாரமுள்ளோர்
தங்கடம் ஏதுமின்றி
தாய் சேயை ஈன்றெடுக்க
தங்கநபி தவமகளே
தருணத்தில் வந்தருள்வீர்

2. மங்களமாய் மக்களைத்தான்
மகிழ்ந்துபெற்ற மகராசி
எங்கள் பிள்ளை பேறுதனை
எளிதாக்கி வைத்தருள்வீர்
திங்கள்நபி திருமகளே
தீரர் அலியார் துணையே
பங்கம் வராதருள் புரிவீர்
ஃபாத்திமா என் தாயே!

3. கண்மணிகள் ஹஸன் ஹுஸைனார்
கருணையுள்ள மாதாவே
விண்ணோரும் நும் புகழை
விளம்பி நிற்பார் உளம்கனிந்தே
கண்ணியமாய் மகவுதனை
கலங்காமல் பெற்றுத்தர
பண்புமிகு ஃபாத்திமா நும்
பாதம் முத்திவேண்டுகிறேன்.

4. காருண்ய நபிதமக்கும்
கார்முகில் ஹஸன் ஹுஸைன்கும்
பார்புகழ் அலியவர்க்கும்
நூர்ஃபாத்திமா நுமக்கும்
ஓய்வில்லா ஸலவாத்தும்
மாய்வில்லா சலாமுடனே
தாய்சேய் இல்லான் பொழிந்திடவே
தூய்மையில்லான் வேண்டுகிறேன்.

(மௌலாய ஸல்லி ...)